FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**in Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | வணிகக்கல்வி I | 32 | T | I | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

**சுட்டெண் : ……………………..**

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | | | |
|---|---|---|---|
| வினா விடை | புள்ளிகள் | | கையொப்பம் |
| 01 – 30 | | 1 வது பரீட்சகர் | |
| 31 – 50 | | 2வது பரீட்சகர் | |
| மொத்தம் | | | |

## பகுதி I

01. வணிகமொன்றில் காணப்படும் பண்புகளில் இடரொன்று காணப்படல் என்பதும் ஒன்றாகும். பின்வரும் இடர்களில் வணிகங்களினால் கட்டுப்படுத்தக்கூடிய இடரென எதனைக் கருதுகின்றீர்.
   1) நுகர்வோரின் சுவை, வடிவம், கேள்வி என்பனவற்றில் ஏற்படும் மாற்றம்.
   2) உற்பத்தித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்.
   3) வணிகத்தின் வளப்பாவனை தொடர்பிலான முகாமையின் பிழையான தீர்மானங்கள்.
   4) மூலப்பொருள், எரிபொருள் பற்றாக்குறைகள்.
   5) சந்தையின் போட்டித்தன்மை அதிகரித்தல். (……….)

02. மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு பயன்படும் பல்வேறு முறைகள் என்பதுடன் தொடர்புபடாத பண்பு பின்வருவனவற்றுள் எது?
   1) தனிநபர்களுக்கிடையில் பொதுவானதாக காணப்படும்.
   2) வரையறுக்கப்படாததாக இருத்தல்.
   3) வாழ்வதற்கு கட்டாயமாக பூர்த்தி செய்ய தேவையற்றது.
   4) வணிகர்களால் தோற்றுவிக்கக்கூடியது.
   5) சமூகத்தாக்கங்களால் மாற்றம் செய்யக்கூடியது. (……….)

03. வணிகக் கருமங்களுடன், தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) வளங்களைப் பொருள் அல்லது சேவையாக மாற்றும் செயற்பாடு உற்பத்திக்காரணி என அழைக்கப்படும்.
   2) வாடிக்கையாளரின் தேவைகளையும், விருப்பங்களையும் இனம் காணுதல் நிர்வாக கருமங்கள் என அழைக்கப்படும்.
   3) ஈர்ப்பு, தெரிவு செய்தல், பயிற்சியளித்தல் என்பன தகவல் முகாமைத்துவம் என அழைக்கப்படும்.
   4) வெளியீட்டின் தரத்தினை உயர்த்துதல் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என அழைக்கப்படும்.
   5) நிதிகளை ஈட்டலும், அவற்றை ஈடுபடுத்துதலும் மனிதவள கருமங்கள் என அழைக்கப்படும். (……….)

04. “வணிகவங்கிகள் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வசதிகளை வழங்கும் பொருட்டு நவீன தொழில்நுட்ப இயந்திரங்களாகிய தன்னியக்க ரெலர் (ATM), காசுவைப்பு (CDM) என்பனவற்றை பொருத்தும் பொழுது மத்திய வங்கியின் அனுமதியினை பெற்றுக் கொள்வது கட்டாயம் என்பதுடன், இதனூடே மக்களும் தமது வருமானம், சேமிப்பு என்பனவற்றில் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடிவதுண்டு.”

மேற்படி கூற்றில் அடங்கியுள்ள பேரினச்சூழல் காரணிகளின் எண்ணிக்கையாக இருப்பது.

1) இரண்டாகும் 2) மூன்றாகும் 3) நான்காகும்

4) ஐந்தாகும் 5) ஆறாகும் (……..)

05. நிலை பேண்தகு அபிவிருத்தியின் பிரதான கோபுரங்கள் X அட்டவணையிலும், அவை ஒவ்வொன்று தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் Y அட்டவணையிலும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A – பொருளாதார நிலைபேண்தகு அபிவிருத்தி | 1) சமத்துவ நிலை பேணல்.<br>2) கழிவுப்பொருள் முகாமைத்துவம் |
| B – சூழல் நிலைபேண்தகு அபிவிருத்தி | 3) திறன்களைப் பலப்படுத்தல்<br>4) மானிட பல்லினத்தன்மைக்கு மதிப்பளித்தல். |
| C – சமூக நிலைபேண்தகு அபிவிருத்தி | 5) புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்துதல்.<br>6) தீங்கிழைக்காத வலுச்சக்தி பயன்பாடு |

X க்கும் Y க்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) A – 1, 4 B – 5, 6, C – 2, 3

2) A – 3, 5 B – 2, 6 C – 1, 4

3) A – 2, 3 B – 1, 5 C – 4, 6

4) A – 4, 6 B – 3, 5 C – 1, 2

5) A – 5, 6 B – 1, 4 C – 2, 3 (……..)

06. வணிகங்களை வெற்றிகரமாக கொண்டு நடாத்துவது தொடர்பில் பல்வேறு வழிகளில் அரசு தலையீடுகளை மேற்கொள்வதுடன், அதன் மூலம் அரசு பல விடயங்களை எதிர்பார்ப்பதும் உண்டு. இதன்படி அட்டவணை X இல் அரசு தலையிடும் முறைகளும், அட்டவணை Y இல் அரசு எதிர்பார்க்கும் விடயங்களும் காட்டப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| P - ஊக்குவிப்பாளராக | 1. சிறந்த தரமான சேவையினை வழங்க. |
| Q - வாடிக்கையாளராக | 2. நடைமுறையில் தொழிற்படும் முதலீட்டாளரை தக்கவைக்க. |
| R - போட்டியாளராக | 3. தேவையற்ற வணிகம் உள்நுழைவைத் தடுக்க. |
| S – வரி அறவீட்டாளராக | 4. விற்பனைகளை ஊக்குவிக்க. |

X க்கும் Y க்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) P – 1 Q – 3 R – 2 S – 4

2) P – 2 Q – 1 R – 4 S – 3

3) P – 3 Q – 4 R – 1 S – 2

4) P – 4 Q – 1 R – 3 S – 2

5) P – 2 Q – 4 R – 1 S – 3 (……..)

07. பின்வரும் செயற்பாடுகளில் அரசின் இறைக்கொள்கையுடன் தொடர்புடைய செயற்பாடெனக் கருதக்கூடியது.

1) வங்கிவட்டி வீத மாற்றங்கள்.

2) கடன் வழங்கலுக்கான உச்ச வரையறை.

3) வணிக வங்கிகளின் மூலதனம், சொத்து என்பனவற்றின் நிர்ணயம்.

4) யாழ்ப்பாண விமானநிலைய நிர்மாணமும் அபிவிருத்தியும்.

5) கடன்துறைகளை கருத்தில் எடுத்தல். (……..)

08. வணிக அமைப்பு வகை தொடர்பிலும், அதன் குணா அம்சங்கள் தொடர்பிலும் ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு.

A. தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட சட்ட ஆளுமையுள்ள, இலாபம் உழைத்தலை நோக்காகக் கொள்ளாத வணிக அமைப்பு வகை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகும்.

B. பொதுத்துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்படாத சட்ட ஆளுமையுடைய இலாபநோக்கற்ற வணிக அமைப்புவகை அரச திணைக்களங்களாகும்.

C. தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுடைய ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை பத்தினைக் கொண்டிருக்க வேண்டிய வணிக அமைப்பு வகை கூட்டுறவு வணிகங்களாகும்.

D. பொதுத்துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்பட்ட சட்ட ஆளுமையற்ற, இலாபம் உழைத்தலை நோக்கமாகக் கொண்ட வணிக அமைப்பு வகை அரச கூட்டுத்தாபனங்களாகும்.

E. தனியார் துறைக்குரிய, பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்க முடியாத வணிக அமைப்பு வகை பங்குடமை வணிகங்களாகும்.

மேற்படி மாணவர்களின் கூற்றுக்களுள் மிகச்சரியான கூற்றினை குறிப்பிட்டுள்ள மாணவன் அல்லது மாணவர்கள் யார்?

1) A மட்டும்    2) B யும் D யும்    3) C யும் E யும்

4) D மட்டும்    5) E மட்டும் (……..)

09. ஆகாஷ், றிபாஸ், ஆனோல்ட், பவிராஜ் ஆகிய நான்கு மாணவ நண்பர்களும் தமது எதிர்கால முயற்சிகள் தொடர்பில் கலந்துரையாடுகின்றனர்.

ஆகாஷ் :- இயற்கை சூழலுக்கு பாதிப்பின்றி சூழல்நேய உற்பத்திகளுக்கு முன்னுரிமை கொடுத்தல். எனது நோக்கு என குறிப்பிடுகின்றார்.

றிபாஸ் :- எந்த முயற்சியாயினும் அதில் பணியாற்றுபவர்களினை ஊக்கப்படுத்துவதனூடே அவர்களது ஆக்க ரீதியான கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்தலே எனது நோக்கு என குறிப்பிடுகின்றார்.

ஆனோல்ட் :- தொழில்நுட்ப பிரயோகத்தின் ஊடே, உலகம் முழுவதிலும் தனது உற்பத்திகளை வெற்றிகரமாக விநியோகித்தல் எனது நோக்கு என குறிப்பிடுகின்றார்.

பவிராஜ் :- நான் சார்ந்த சமூகமக்களுக்கு என்னாலான சேவைகளை ஆற்ற வேண்டும், இதுவே எனக்கு திருப்தியினை அளிக்கும் என குறிப்பிடுகின்றார்.

மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு மாணவர்களதும் எதிர்கால முயற்சிகள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் முயற்சியாண்மைப் போக்குகளை சரியாக வெளிப்படுத்தும் தொகுதியாக அமைவது.

1) ஆகாஷ் - சமூக முயற்சியாண்மை, றிபாஸ் - பூகோள முயற்சியாண்மை.
ஆனோல்ட் - பச்சை முயற்சியாண்மை, பவிராஜ் - உள்ளக முயற்சியாண்மை.
2) ஆகாஷ் - உள்ளக முயற்சியாண்மை, றிபாஸ் - சமூக முயற்சியாண்மை.
ஆனோல்ட் - பூகோள முயற்சியாண்மை, பவிராஜ் - பச்சை முயற்சியாண்மை.
3) ஆகாஷ் - பூகோள முயற்சியாண்மை, றிபாஸ் - பச்சை முயற்சியாண்மை
ஆனோல்ட் - உள்ளக முயற்சியாண்மை, பவிராஜ் - சமூக முயற்சியாண்மை.
4) ஆகாஷ் - பச்சை முயற்சியாண்மை, றிபாஸ் - உள்ளக முயற்சியாண்மை.
ஆனோல்ட் - பூகோள முயற்சியாண்மை, பவிராஜ் - சமூக முயற்சியாண்மை.
5) ஆகாஷ் - சமூக முயற்சியாண்மை, றிபாஸ் - உள்ளக முயற்சியாண்மை.
ஆனோல்ட் - பச்சை முயற்சியாண்மை, பவிராஜ் - பூகோள முயற்சியாண்மை.

(……..)

10. இலங்கையில் உள்ள பிரபல சர்வதேச பாடசாலையொன்றின் பழைய மாணவர்கள் கல்லூரித்தினத்திற்காக வெளிநாடுகளிலிருந்து வருகைதந்து, தமது யாவரினதும் பங்களிப்பாக ரூபா பத்து இலட்சத்தினை கல்வி அபிவிருத்திக்கென அதிபரிடம் கையளிக்கின்றனர். இதில் ரூபா ஐந்து இலட்சத்தினை மக்கள் வங்கியில் கல்லூரி அபிவிருத்திக்கான நடைமுறைக்கணக்கில் வைப்பிலிட்ட அதிபர், மிகுதிப்பணத்தில் ரூபா மூன்று இலட்சத்தினை அதே வங்கியில் கல்லூரியின் பெயரில் நிலையான வைப்பில் இடுகின்றார். மீதமுள்ள இரண்டு இலட்சம் ரூபாவினை இலங்கை வங்கியின் கல்லூரி சேமிப்புக்கணக்கில் இட்டு அதற்கென வரவு அட்டை ஒன்றினையும் பெற்றுக்கொள்கின்றார்.
மேற்படி சம்பவத்தில் காணப்படத்தக்க பணவகைகளினையும் அவற்றின் பெறுமதிகளையும் சரியாக எடுத்துக்காட்டும் விடை எது?

| | சட்டப்பணம் | வங்கிப்பணம் | அண்மிய பணம் | இலத்திரனியல் பணம் |
|---|---|---|---|---|
| 1) | 500,000/= | 200,000/= | 300,000/= | 10,00,000/= |
| 2) | 10,00,000/= | 300,000/= | 200,000/= | 500,000/= |
| 3) | 10,00,000/= | 500,000/= | 500,000/= | 200,000/= |
| 4) | 300,000/= | 10,00,000/= | 500,000/= | 500,000/= |
| 5) | 200,000/= | 500,000/= | 10,00,000/= | 300,000/= |

(……..)

11. இலத்திரனியல் பண அட்டைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்த முடியாத வசதியாக கருதக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
1) தொலைக்காட்சி வங்கி வசதி.
2) பத்திரங்களற்ற பிணைத்தீர்ப்பனவு முறை.
3) தொலை வங்கி வசதி.
4) வலையமைப்பு வங்கிக்கருமங்கள்.
5) இலத்திரனியல் நிதி மாற்று விற்பனை மையம். (……..)

12. ராகவன் என்பவர் தான் செலுத்த வேண்டிய தொகைக்காக ஜொசுவா என்பவரது பெயரில் காசோலை ஒன்றினை பிறப்பித்து வழங்குகின்றார். ஜொசுவா அக்காசோலையில் பாதுகாப்பு கருதி "கைமாற்றத்தகாதது" என்ற வாசகத்துடன் கூடிய குறுக்குக்கோட்டினை இட்டு தான் பணம் செலுத்த வேண்டிய கஜீபன் என்பவருக்கு புறக்குறிப்பிட்டு வழங்குகின்றார். கஜீபன் இக்காசோலையின் முகப்பில் உள்ள வங்கிக்கரும பீடத்தில் பணமாக்குவதற்காக சமர்ப்பிக்கின்றார்.

மேற்படி காசோலை பரிமாற்றத்துடன் தொடர்புபட்டுள்ள தவறான செயற்பாடெனக் கருதப்படக்கூடியது எது?

1) ராகவன், ஜொசுவா என்பவரது பெயரில் காசோலையினை பிறப்பித்திருத்தல்.
2) பெறுனர் ஆகிய ஜொசுவா குறுக்கோட்டினை காசோலையில் இடுதல்.
3) கைமாற்றத்தகாதது என்ற குறுக்குக்கோடிட்ட காசோலையினை கஜீபனுக்கு புறக்குறிப்பிட்டு வழங்கியமை.
4) கஜீபன் காசோலையின் முகப்பில் உள்ள வங்கி கருமபீடத்தில் பணமாக்குவதற்கு சமர்ப்பித்தமை.
5) ஜொசுவாவின் பெயரில் எழுதிய காசோலையினை கஜீபனுக்கு வழங்கியமை. (……..)

13. உற்பத்தி தொழிற்சாலையொன்றின் பாரிய புகை போக்கியொன்று திடீரென உடைந்து வீழ்ந்ததில் அருகில் இருந்த சில குடியிருப்புக்கள் பாதிக்கப்பட்டதற்கு உற்பத்தியாளர் மேற்கொள்ளக்கூடிய காப்புறுதி எவ்வாறு அழைக்கப்பட முடியும்.

1) பொது பொறுப்புக் காப்புறுதி
2) உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி
3) தீயபாய காப்புறுதி
4) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி
5) மூன்றாம் பிரிவுக் காப்புறுதி (……..)

14. களஞ்சியப்படுத்தல் செயன்முறையுடன் தொடர்புபடாத கருமம் என கருதக்கூடியது. பின்வருவனவற்றுள் எது?

1) இருப்புக்கள் கிடைக்கப்பெறல்
2) இருப்புக்களை இனம் காணல்
3) பொருள் பரிசோதனை
4) பொருள் பெறப்பட்டதனை மீள வலியுறுத்தல்.
5) பொருள் தரத்தினை உறுதிப்படுத்தல் (……..)

15. நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை என்பனவற்றிற்கமைய பல்வேறுபட்ட வகையிலான அமையவியல் முறைகள் பயன்படுத்தப்படுவதுண்டு. கீழே அமையவியலின் முறைகளும், அவற்றுக்கான உற்பத்திகளின் தன்மைகளும் காட்டப்படுகின்றன.

| **அமையவியல் முறைகள்** | **உற்பத்திகளின் தன்மைகள்** |
|---|---|
| A – சமநிறை கொண்ட அமையவியல் முறை | 1) நெஸ்லே உற்பத்திகள் |
| B – அதிகரித்த பெறுமதியில் உள்நோக்கிய அமையவியல் முறை | 2) வாயுத்தாங்கி |
| C – அதிகரித்த பெறுமதியில் வெளி நோக்கிய அமையவியல் முறை | 3) விமான உற்பத்தி |
| D – நேர்மாற்று அமையவியல் முறை | 4) இரசாயன பொருள் உற்பத்தி |

அமையவியல் முறைகளினையும், உற்பத்திகளின் தன்மைகளினையும் சரியாக பொருத்தும் விடையாக அமைவது எது?

1) A – 2 B – 3 C – 1 D – 4
2) A – 2 B – 4 C – 3 D – 1
3) A – 3 B – 2 C – 1 D – 4
4) A – 4 B – 1 C – 2 D – 3
5) A – 1 B – 3 C – 4 D – 2 (……..)

16. வெளிநாட்டு வியாபாரத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களில் சில X நிரலிலும், அவை தேவைப்படுவதற்கான காரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் | A. விவசாய உற்பத்திகளின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறதி செய்ய. |
| 2) நட்ட ஈட்டுக்கடிதம் | B. வரிச்சலுகைகளைப் பெறுவதற்கு. |
| 3) சுகநல சான்றிதழ் | C. குற்றமுடைய சுமைச்சீட்டிற்கு பதிலாக தூய சுமைச்சீட்டினைப் பெறுவதற்கு. |
| 4) வார்நாமம் | D. பொருளின் உரிமையினை துறைமுகத்தில் உறுதிப்படுத்துவதற்கு. |

X நிரலில் உள்ள ஆவணங்களுக்கேற்ப, Y நிரலில் தரப்பட்டுள்ள தேவைப்படுவதற்கான காரணங்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையாக அமைவது.

1) A, D, C, B　　2) D, B, C, A　　3) B, C, A, D
4) C, D, B, A　　5) A, C, D, B　　(……….)

17. றொபர்ட். எல். கேட்ஸ் என்பவரினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முகாமையாளர்களிடம் மேம்படுத்த வேண்டிய திறன்கள் X அச்சிலும், அத்திறன்களுக்கான விளக்கங்கள் Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளது.

| X | Y |
|---|---|
| A. எண்ணக்கருத்திறன் | 1) ஊழியர் கருத்துக்களுக்கு செவிமடுத்தல்<br>2) உடனடியாகவே செயலாற்றும் ஆற்றல்<br>3) முழுமையாக பகுப்பாய்வு செய்யும் திறன் |
| B. மானிடத்திறன் | 4) பிரச்சினைகளை விரைவாக கண்டறியும் ஆற்றல்.<br>5) பிரச்சினைகளை விளங்கி தீர்வினை வழங்குதல். |
| C. தொழில்நுட்பத்திறன் | 6) ஊழியர்களின் பலம், பலவீனங்களை அறிந்து வைத்திருத்தல். |

X, Y என்பனவற்றினை இணைக்கும் போதான சரியான விடையாக அமைவது.

1) A – 2, 6　B – 3, 5　C – 1, 4
2) A – 3, 5　B – 1, 6　C – 2, 4
3) A – 1, 4　B – 5, 6　C – 2, 3
4) A – 4, 6　B – 2, 5　C – 1, 3
5) A – 3, 6　B – 2, 4　C – 1, 5　(……….)

18. பின்வரும் அட்டவணையில் X நிரலானது தீர்மானம் எடுத்தலின் படிமுறைகளினையும், Y நிரலானது அதனுடன் தொடர்புடையதாக தற்போது வேகமாக பரவிவரும் டெங்கு நோய் தொடர்பிலான செயற்பாட்டுத் தகவல்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A. பிரச்சினைகளை இனம் காணுதல் | 1) துரித மருத்துவ சேவை பிரிவினை ஸ்தாபித்தல். |
| B. மாற்றுத் தீர்வுகளை இனம் காணுதல். | 2) தொடர்ச்சியாகவே டெங்கு நோயாளர்களை கண்காணித்து வருதல். |
| C. மாற்றுத்தீர்வுகளை மதிப்பிடல் | 3) பல்வேறுபட்ட சுகாதார தரப்பினருடன் கலந்துரையாடி ஆலோசனைகளைப் பெறுதல். |
| D. சிறந்த மாற்றுத்தீர்வினை தெரிவு செய்தல் | 4) காச்சலினால் பீடிப்போர் எண்ணிக்கை உயர்வடைந்து செல்லுதல். |
| E. தீர்மானத்தை அமுல்படுத்தல் | 5) பெறப்பட்ட ஆலோசனைகளை உயர்மட்ட சுகாதார செயற்குழுவில் பகுப்பாராய்தல். |

தீர்மானமெடுத்தல் படிமுறைகளையும் அவற்றுடன் இணைந்த செயற்பாட்டுத்தகவல்களையும் சரியாக இணைத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) A – 1, B – 2 , C – 4 , D – 3 , E – 5
2) A – 4, B – 3 , C – 5 , D – 2 , E – 1
3) A – 2, B – 1 , C – 3 , D – 5 , E – 4
4) A – 5, B – 1 , C – 4 , D – 3 , E – 2
5) A – 4, B – 2 , C – 3 , D – 1 , E – 5 (……..)

19. முகாமைத்துவக் கருமங்களுடன் தொடர்புடைய சில பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. தொழிற்பிரிவு
B. சூழல்சார் பகுப்பாய்வு
C. இணைப்பாக்கம்
D. நோக்கங்களை நிறுவுதல்.
E. பணிகளை இனம் காணுதல்.
F. திணைக்களப்படுத்தல்
G. தொடர்பாடல்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஒழுங்கமைத்தலுக்கான பணிகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?

1) A, B, C, F 2) A, B, D, G 3) A, C, D, G
4) A, C, E, F 5) A, C, D, E (……..)

20. இலங்கையிலிருந்து வெளியிடப்படும் பிரபலமான பிஸ்கட் கம்பனி ஒன்றின் பொது முகாமையாளர், தமது உற்பத்தியின் தரம் தொடர்பில் நடுத்தர, கீழ்மட்ட முகாமையாளர் மற்றும் ஊழியர்களுக்கான கூட்டத்தில் கூறிய சில கருத்துக்கள் வருமாறு, ''எமது அனைத்து வெளியீடுகளும் 100% தரமுடையனவாக இருத்தல் வேண்டும், இதற்காக ஒவ்வொருவரும் தத்தமது பலம், பலவீனங்களை அறிந்து, பலவீனங்களை இல்லாமல் செய்தல் வேண்டும். அத்துடன் மாதம் இரு தடவை துறைசார்ந்த கலந்துரையாடல்களை நடாத்துதல் வேண்டும். இவற்றுடன் கடந்தகால சாதனை அடைவு மட்டங்களை அட்டவணைகள் வரைபடங்களாக பிரதான விளம்பர பலகைகளில் காட்சிப்படுத்தல் வேண்டும்''

மேற்படி பொது முகாமையாளரது கூற்றில் தரத்தினை மேம்படுத்தும் நுட்பங்களை சரியாக கொண்ட தொகுதியாக அமைவது எது?

1) தரநியமம், தர உறுதி, தரவட்டம்.
2) புள்ளிவிபர செயன்முறை கட்டுப்பாடு, மொத்ததரமுகாமை, தர உறுதி.
3) தரவட்டம், புள்ளி விபர செயன்முறை கட்டுப்பாடு, தர நியமம்.
4) பூச்சியவழு, தரவட்டம், புள்ளி விபரரீதியான செயன்முறை கட்டுப்பாடு.
5) தர உறுதி, பூச்சிய வழு, தரவட்டம். (……..)

21. பானங்களை போத்தலில் அடைத்து விற்பனை செய்யும் நிறுவனமொன்றின் செலவின வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளம்.
B. தொழிற்சாலைக் காப்புறுதிக் கட்டணம்.
C. மூலப்பொருட் கொள்வனவுகள்.
D. விற்பனைத்தரகுகள்.
E. வெற்றுப் போத்தல்கள் கொள்வனவு
F. வரிக்கட்டணங்கள்.
G. துண்டுவீத அடிப்படையிலான ஊழியர் கூலிகள்.
H. உற்பத்தி அலகுகள் மீதான தனியுரிமைக் கட்டணங்கள்.

இவற்றுள் அலகு பங்களிப்பினை கணிப்பிடுவதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய உருப்படிகளினைக் கொண்ட தொகுதியாக அமைவது.

1) A, B, C, D, E    2) B, E, F, G, H    3) A, B, E, G, H
4) B, C, E, F, G    5) C, D, E, G, H    (……..)

22. உற்பத்தி நிறுவனங்களில் இருப்புக்கள் காலம் கடந்து போதல் தொடர்பான இடரினை உயர்வாக கொண்டிருக்கையில் பின்பற்றத்தக்க இருப்புக்கட்டுப்பாட்டு முறையாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1) ABC பகுப்பாய்வு முறை
2) இரட்டைக் கொள்கலன் முறை
3) JIT முறை
4) தொடர் இருப்பு அறிக்கைப்படுத்தும் முறை.
5) இருப்பு மட்டத்தை தீர்மானிக்கும் முறை. (……..)

23. பொருளொன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டம் என்பது பல்வேறு கருதுகோள்களினால் கட்டியெழுப்பப்பட்டதாகும். கீழ்வரும் கருதுகோள்களில் மிகச்சரியான கருதுகோளாக கருதப்படக் கூடியது எது?

1) பொருள் ஒன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் போது விற்பனையாளரினால் பல்வேறுபட்ட உபாய முறைகள் பயன்படுத்த வேண்டியிருப்பதில்லை.
2) உற்பத்திகளுக்கு குறிப்பிட்ட ஆயுட்காலமென ஒன்று இருப்பதில்லை.
3) பொருள் ஒன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் ஐந்து கட்டங்களையும் ஒவ்வொரு பொருளும் கடக்கும் என கருத முடிவதில்லை.
4) உற்பத்தியொன்று விற்பனையாளருக்கு வேறுபட்ட ஆயுள் கட்டங்களில் ஒரே மாதிரியான அச்சுறுத்தல்களையே ஏற்படுத்துவதுண்டு.
5) பொருள் ஒன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் பல்வேறு கட்டங்களின் போது விற்பனையும், இலாப அளவுகளும் மாற்றமடைந்து செல்வதில்லை. (……..)

24. உற்பத்திப் பொருள் மட்டங்கள் X அச்சிலும், அவ் ஒவ்வொரு மட்டங்களுக்குமான உதாரணங்கள் செல்லிடத்தொலைபேசியின் அடிப்படையில் Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. மையநலன் | 1) சீரான ஒலி, ஒளி, தெளிவான திரை |
| B. அடிப்படை உற்பத்திப் பொருள் | 2) Viber, WhatsApp, Skype போன்ற தொழில்நுட்ப கூறுகளை இணைத்தல். |
| C. எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திப் பொருள் | 3) அழைப்பு உள்வருகையும், அழைப்பு வெளிச்செல்லலும். |
| D. விருத்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருள் | 4) புகைப்படக்கருவி, வீடியோ, GPS, Bluetooth, Video Game போன்றவற்றை புகுத்துதல். |

X, Y என்பவற்றினை இணைக்கும் போது சரியான இணைப்பாக அமைவது.

1) A – 3 B – 1 C – 4 D – 2
2) A – 2 B – 4 C – 3 D – 1
3) A – 4 B – 2 C – 1 D – 3
4) A – 1 B – 3 C – 2 D – 4
5) A – 1 B – 3 C – 4 D – 2 (……..)

25. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட “கொலிமன்” (Koliman) பாதணி உற்பத்தி வணிகமொன்று வாடிக்கையாளர்களை ஈர்க்கும் பொருட்டு வருகை தரும் ஒவ்வொரு வாடிக்கையாளரதும், தேவை, விருப்பங்கள், அளவுகள், வடிவமைப்பு, வர்ணம் என்பனவற்றை அறிந்து கணனி வடிவமைப்பு செய்து காண்பிப்பதன் ஊடே பாதணிகளை ஆக்கி வழங்க இருப்பதாக விளம்பரப்படுத்துகின்றது. மேற்படி வணிகம் பின்பற்றும் சந்தைப்படுத்தல் எண்ணக்கரு எது என கருதுகின்றீர்.

1) உற்பத்தி எண்ணக்கரு
2) உற்பத்தி பொருள் எண்ணக்கரு
3) விற்பனை எண்ணக்கரு
4) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
5) வாடிக்கையாளர் எண்ணக்கரு (……..)

26. கீழே நிதி முகாமைத்துவ தீர்மானங்களும், அவற்றிற்குப் பொருந்தும் சிறிய தீர்மானங்களும் காட்டப்படுகின்றன. இவற்றுள் பொருத்தமற்ற இணைப்பினைத் தெரிவு செய்க.
   1) நீண்டகால முதலீட்டு தீர்மானம் - உரிமை மூலதனம் தொடர்பானது.
   2) குறுங்கால முதலீட்டு தீர்மானம் - காசு முகாமைத்துவம் தொடர்பானது.
   3) நீண்டகால நிதியிடல் தீர்மானம் - இலாபத்தினை நிறுத்திவைத்தல் தொடர்பானது.
   4) குறுங்கால நிதியிடல் தீர்மானம் - வியாபார கடன் கொடுத்தோர் தொடர்பானது.
   5) நிதி முகாமைத்துவ தீர்மானம் - வணிகத்தைப் பன்முகப்படுத்தும் முதலீடும், அதற்கான கடன் பெறும் நிதியீட்டலும். (……….)

27. பின்வருவன மாற்று நிதியீட்டல் வழிமுறைகளின் சில அனுகூலங்கள் ஆகும்.
   - பெற்றுக்கொள்ளல் இலகு.
   - குறைந்த கிரயம் உடையனவாக இருத்தல்.
   - மீளச் செலுத்த வேண்டிய பொறுப்பு இருப்பதில்லை.
   - வணிக பொறுப்புக்கள் அதிகரிக்காமை.
   - நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டிய அவசியமிருப்பதில்லை.

   மேற்குறித்த அனுகூலங்கள் யாவற்றையும் கொண்டுள்ள நிதியீட்டல் வழிமுறையாகக் கருதக்கூடியது எது?
   1) வங்கிக்கடன் 2) மேலதிக சொத்து விற்பனை 3) குத்தகை
   4) முன்னுரிமை பங்கு வழங்கல் 5) சாதாரண பங்கு வழங்கல் (……….)

28. பட்டியற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனி தொடர்பாக மிகச்சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) உரித்து வழங்கல் செயற்பாட்டினால் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் மாற்றங்கள் இடம்பெறுவதில்லை.
   2) பங்காணைப்பத்திரம் ஒன்றினை கொள்வனவு செய்து வைத்துள்ள முதலீட்டாளர் பங்கிலாபங்களை பெறமுடிவதுண்டு.
   3) உரித்து வழங்கலினால் கம்பனியின் பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுண்டு.
   4) ஓதுக்கங்களை மூலதனமாக்கல் செயன்முறையின் போது கொழும்பு பங்குசந்தையின் பூரணமான அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும்.
   5) பங்குகளின் சந்தை விலை அதிகரித்தல் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தை அதிகரிப்பதுண்டு. (……….)

29. மனிதவள முகாமைத்துவத்தின் பொதுநோக்கமெனக் கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
   1) பொருத்தமான ஊழியர்களை பணியில் அமர்த்துதலும், கிரயக்கட்டுப்பாடும்.
   2) ஊழியக்கிரயங்களைக் கட்டுப்படுத்துதலும், செயற்திறன் அதிகரிப்பும்.
   3) ஊழியர்களை ஊக்குவித்தலும், சிறந்த வேலைச் சூழலும்.
   4) ஊழிய அர்ப்பணிப்பை அதிகரித்தலும், உற்பத்திதிறனை அதிகரித்தலும்.
   5) திருப்திகரமான ஊழியர்களை அமர்த்துவதும் தொடர்ந்து தக்கவைப்பதும். (……….)

30. பின்வருவன நிறுவனமொன்றின் ஆட்சேர்ப்பு முறைகள் சில ஆகும்.

A. வேலை அறிவித்தல்.

B. தொழிற் சந்தைகள்

C. இணைய தளங்கள்

D. திறன் அட்டவணை

E. ஊழியர் சிபார்சு

F. கல்வி நிறுவனங்கள்.

G. ஊடக விளம்பரங்கள்

இவற்றுள் ஆட்சேர்ப்பு கிரயங்கள் குறைவாகவும், பணியில் அமர்ந்தும் காலம் குறைவாகவும் உள்ள ஆட்சேர்ப்பு முறைகளினைக் கொண்ட தொகுதியாக அமைவது எது?

1) A, D, E  2) C, F, G  3) B, D, F  4) D, E, G  5) E, F, G  (…..…..)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

31. அ) ஆடை உற்பத்தி நிறுவனமொன்று ஆடைகளை வடிவமைத்து பொதியாக்கி சந்தைக்கு வழங்குதல் ………………………………………. நிறைவு செய்தல் எனவும், ஆடை உற்பத்தி தொழிற்பிரிப்பில் ஒவ்வொரு செயன்முறைகளைக் கடக்கும் போதும் வளங்களுக்கு ………………………………………. ஆகிய இரு பிரதான வணிகக்கருமங்கள் இடம்பெறுவதனை காண முடிவதுண்டு.

ஆ) சூழல் பாதுகாப்பு ………………………… சார் சமூகப்பொறுப்பாக கருதப்படுகையில், தொழில் பாதுகாப்பு ……………………………….. சார் சமூகப்பொறுப்பாக கருதப்படுவதுண்டு.

32. அ) தற்போதைய அரசு VAT வரியினை குறைத்தமையும் NBT முற்றாக நீக்கியமையும் ……………………………….. கொள்கையுடன் தொடர்புபடுகையில், இவ்வரிக்குறைப்புக்கள் நுகர்வோரின் கொள்வனவு சக்தியினை ………………………….. என கருத முடியும்.

ஆ) ஒழுங்குமுறையான அமைப்பொன்று, அமைப்புரீதியாக கட்டமைக்கப்பட்டிருப்பதுடன், அது ……………………………………………, ………………………………………….. ஆகிய பொதுப்பண்புகளைக் கொண்டிருப்பதுண்டு.

33. நாட்டில் நிலவும் பணவீக்க நிலைமைகளினால் பாதிக்கப்படாத பணத்தின் பிரதான தொழிற்பாடுகளாக ……………………………………….., ……………………………………………. காணப்படுகையில், பாதிக்கப்படக்கூடிய பணத்தின் பிரதான தொழிற்பாடுகளாக …………… ……………………………..…….., ………………………….………… காணப்படுவதுண்டு.

34. அ) குறித்த கடன் தொகை, குறித்த வட்டிவீதத்தில், உரியகாலத்தில் மீளச்செலுத்தும் நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து வங்கியொன்றினால் வழங்கப்படும் பணத்தொகை ……………………… என அழைக்கப்படுவதுடன் நடைமுறைக்கணக்கில் உரிமையாளர் சொத்தொன்றினை பிணைகாட்டி தொடர்ச்சியாக பெறும் கடன் வசதி …………………………. எனவும் அழைக்கப்படும்.

ஆ) ஆயுள் காப்புறுதிக்கு இழப்பீட்டுத் தத்துவமும் அதனுடன் இணைந்த துணைத்தத்துவங்களாகிய ……………………………, ……………………………….. என்பன பொருத்தமற்றவையாகும்.

35. இலங்கையின் போக்குவரத்து துறையுடன் தொடர்புடைய சம்பவங்கள் சில கீழே தரப்படுகின்றன. அவற்றினை போக்குவரத்தின் அடிப்படை மூலங்களுடன் தொடர்புபடுத்திக் காட்டுக.

அ) யாழ்ப்பாண விமான நிலையத்தை விரிவுபடுத்துதல்.

……………………………………………………………………………………………………

ஆ) மாற்றுத்திறனாளிகள் இலகுவாக போக்குவரத்து செய்வதற்கான பத்து பேரூந்துகளை இறக்குமதி செய்தல்.

……………………………………………………………………………………………………

இ) டீசல், பெற்றோல் என்பனவற்றின் விலையினை சீராக பேணி வருதல்.

……………………………………………………………………………………………………

ஈ) வடக்கிற்கான அதிவேக நெடுஞ்சாலைப்பணிகளை மீள ஆரம்பிக்கத் திட்டமிடல்.

……………………………………………………………………………………………………

36. அ) ஹென்றி மின்ட்ஸ்பேர்க்கின் முகாமைத்துவ வகிபாக அடிப்படையில் எதிர்பாராத நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதான நடவடிக்கை …………………………..……… பிரதான வகிபாகமாகவும் ……………………………….……… உபவகிபாகமாகவும் கருதப்படுவதுண்டு.

ஆ) அமைப்பொன்றின் நோக்கத்தை அடைந்து கொள்வதில் தனிநபர்களை ஈடுபடுத்துவதற்கு ……………………………., லும் குழுவொன்றில் உள்ள அங்கத்தவர்கள் ஒற்றுமையுடன் கருமமாற்றச் செய்வதற்கு ………………………. மும் கட்டாயமானதாக கருதப்படுவதுண்டு.

37. நிறவன கட்டமைப்பின் கோட்பாடுகள் தொடர்பில் பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா? பொய்யா?** என்பதை அவற்றிற்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

அ) ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கின்ற ஊழியர்களின் எண்ணிக்கை கட்டளையிடலின் ஒருமைப்பாடு என்பதாகும். (……………….………)

ஆ) கட்டுப்பாட்டின் விசாலம் குறுகியது, பரந்தது என இருவகைப்படுத்தப்படுவதுண்டு. (……………….………)

இ) ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு மாத்திரம் பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோட்பாடு மையப்படுத்தல் என்பதாகும். (……………….………)

ஈ) கருமங்களினைப் புரிவதற்காக அல்லது கட்டளையிடுவதற்காக அல்லது வளங்களை ஒதுக்குவதற்காக வழங்கப்படும் உரிமை அதிகாரம் என்பதாகும். (……………….………)

38. அ) தொழிற்சாலை வாடகை, தொழிற்சாலை இறைக்கட்டணம் என்பன மொத்த உற்பத்திக் கிரயத்தின் ………………………………. வகையாக கருதப்படுகையில், நேர் பொருள், நேர் கூலிக்கிரயம் என்பன மொத்த உற்பத்திக்கிரயத்தின் …………………………………. என வகைப்படுத்தப்படுவதுண்டு.

ஆ) பூச்சியவழு, புள்ளிவிபர செயன்முறைக்கட்டுப்பாடு என்பன ………………………… நுட்பமுறைகளாக கருதப்படுகையில், ABC பகுப்பாய்வு, JIT முறைமை என்பன ……………………………………….. முறைகளாகக் கருதப்படுவதுண்டு.

39. அ) ஏதேனும் உற்பத்தி நிறுவனமொன்று ஒரே சின்னத்தின் கீழ் பொருள் வரிசையொன்றை முன்வைத்தல் ……………………………. பண்டக்குறி என அழைக்கப்படுவதுடன், சம காலத்தில் சந்தைப்படுத்தல் கருவியொன்றாகவும், பொருளுக்கு பாதுகாப்பினை பெற்றுக்கொடுப்பதுமான அடிப்படைக் கருமம் ……………………………. என்பதாகும்.

ஆ) சந்தைப்படுத்தலில் விலை குறிக்கும் போது கருத்தில் கொள்ளும் காரணிகளில் பொருளின் கிரயம் மட்டுமன்றி …………………….……….. மற்றும் ……………………….………. என்பனவும் கருத்தில் கொள்ளப்படுவதுண்டு.

40. அ) பங்குகள் தொடர்பான கொள்வனவு மட்டும் இடம் பெறும் சந்தை …………………………... எனப்படுவதுடன், பங்குகளுக்கான கொள்வனவு, விற்பனைகள் இடம் பெறும் சந்தை ……………………………………… என அழைக்கப்படுவதுண்டு.

ஆ) வேலையில் காணப்படும் பண்புகள் தொடர்பான பட்டியல் மனிதவள முகாமையில் ………………………………….. என குறிப்பிடப்படுவதுடன், வேலையொன்றைப் பூரணப்படுத்துவதற்கு தேவையான மனிதப்பண்புகளின் பட்டியல் ……………………………. ………………. என குறிப்பிடப்படுவதுண்டு.

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41. இலாபம் உழைத்தல் என்பதனை தவிர வணிகங்கள் கொண்டிருக்கும் வேறு நான்கு நோக்கங்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………………...

42. *1890* ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்திற்கமைவாக பங்குடமை வணிகமொன்றின் பிரதான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

43. மூலதன செலவு அதிகமெனினும் வங்கிகள் தன்னியக்க வங்கிச் சேவையில் அதிகம் கரிசனை செலுத்துவதற்கான நான்கு காரணங்களினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

44. செய்தியொன்றை தயார் செய்யும் போது, தயாரிப்பவர் கருத்தில் கொள்ளும் நான்கு விடயங்களினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

45. வெளிநாட்டு வியாபாரத்திற்கான அடிப்படைக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

46. நிறுவன செயற்பாடுகளின் பொதுபண்புகளைப் பயன்படுத்தி தொழில்களை தொகுதிகளாக்கும் செயன்முறையின் நான்கு வேறுபட்ட வடிவங்களைக் குறிப்பிடுக.

1) ……………………………………………………………………………………………..

2) ……………………………………………………………………………………………..

3) ……………………………………………………………………………………………..

4) ……………………………………………………………………………………………..

47. உற்பத்தித்திறனை அளவிடும் பின்வரும் ஒவ்வொரு சமன்பாட்டினதும் விரிவாக்கத்தினை எழுதுக.

1) மொத்த உற்பத்தித்திறன் = ………………………………………………………...

………………………………………………………...

2) மூலப்பொருள் உற்பத்தித்திறன் = ………………………………………………………...

………………………………………………………...

3) உழைப்பு உற்பத்தித்திறன் = ………………………………………………………...

………………………………………………………...

4) இயந்திர உற்பத்தித்திறன் = ………………………………………………………...

………………………………………………………...

48. நிறுவனமொன்று பொருத்தமான விநியோக வழிமுறைகளினை தீர்மானிக்குகையில் கவனம் செலுத்தும் விடயங்கள் நான்கினைத் தருக.

1) ……………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………...

49. பொருளாதாரமொன்றின் நிதிமுறைமையின் எவையேனும் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.


1) ……………………………………………………………………………………...


2) ……………………………………………………………………………………...


3) ……………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………...

50. பின்வரும் ஒவ்வொரு குறியீட்டினதும் கருத்தினை எழுதுக.

1) 

2) 

3) 

4) 

1) ……………………………………………………………………………………...

2) ……………………………………………………………………………………...

3) ……………………………………………………………………………………...

4) ……………………………………………………………………………………...

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**in Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | வணிகக்கல்வி - II | மூன்று மணித்தியாலம்<br>மேலதிக வாசிப்பு நேரம் பத்து நிமிடம் |
|---|---|---|

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது, முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

➢ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

*01.* நிலக்சன் என்பவர் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ''தூரபார்வை'' (Long vision) என்ற பெயரில் மறைகாணி (CCTV) பொருத்திக் கொடுக்கும் வணிகம் ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவர் மறை காணி தொடர்பில் சிறந்த அறிவும், அனுபவத்தினையும் கொண்டிருப்பதுடன் தனது விற்பனை இலாபத்தினை விருத்தி செய்து கொள்வதற்காக பொருத்திக் கொடுப்பதற்கு குறைந்த கட்டணத்தினை அறவிடுவதுடன், உள்ளூர் தொலைக்காட்சிகள், மற்றும் தொடருறு இணைய சேவைகளினூடே விளம்பரங்களை செய்து கட்டளைகளைப் பெற்றுவருகின்றார். இவருக்கு உதவியாகஆறு ஊழியர்களை பணியில் அமர்த்தியிருப்பதுடன், மிக நவீன முறையில் உபாயங்கள் கொண்டனவாக மறைகாணிகளைப் பொருத்தி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டுள்ளார். நிறுவனத்தினை ஆரம்பித்த இருவருடத்திலேயே நூறுக்கும் மேற்பட்ட வணிகங்கள், இல்லங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் மறைகாணிகளைப் பொருத்தியதுடன், தற்போது சொந்தமாக சிறிய ரக வாகனம் ஒன்றினையும் கொள்வனவும் செய்துள்ளார் எனினும் போட்டியாளர்களின் வருகையும், மற்றும் உற்பத்தி தொழில்நுட்ப மாற்றங்களும் நிலக்சன் எதிர்நோக்கும் சவால்களாக காணப்படுகின்றன.

1) அ) மேற்படி தூரபார்வை வணிகத்தின் பிரதான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) ''தூர பார்வை'' வணிகத்தினை வணிகமொன்றெனக் கருதுவதற்கு அதில் காணப்படத்தக்க எவையேனும் நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

2) இன்று கூடுதலாக நகரப்புறங்கள் மாத்திரமன்றி கிராமங்களிலும் கூட மறைகாணிகளைப் பொருத்தும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இப்போக்கிற்கான நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

3) அ) ''தூர பார்வை'' வணிகத்தினை நீர்கற்றுள்ள வணிகவகைப்படுத்தலில் எவையேனும் நான்கினுள் வகைப்படுத்திக் காட்டுக.

ஆ) ''மறைகாணி'' பொருத்தும் வணிகத்தில் தற்போது நிலவும் இரு வணிக வாய்ப்புக்களையும், இரு வணிக அச்சுறுத்தல்களையும் குறிப்பிடுக.

4) தொடருறு சேவையினூடாக நிலக்சன் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் இரண்டினையும், பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.

5) “தூர பார்வை” வணிகத்தில் அக்கறை காட்டும் எவையேனும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுவதுடன், அத்தரப்பினர் ஒவ்வொருவரும் வணிகத்தில் அக்கறை காட்டுவதற்கான தலா ஒரு காரணப்படி குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

02. “சமத்துவ நிலை, சமூக மூலதனம், சமூக ஒன்றிணைப்பு, மக்கள் பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி, மனித உரிமைகள், சமூக பொறுப்பு, சமூகநியாயம், சமூகத்திலுள்ள சகலருக்கும் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும் என உலக நாடுகள் வலியுறுத்துகின்றன”

1) அ) நிலைபேறான சமூக அபிவிருத்தியினை அடைவதற்கு வணிகங்கள் எடுக்க வேண்டிய நான்கு நடைமுறைகளினைக் குறிப்பிடுக.

ஆ) கழிவுப்பொருள் சேர்வது இன்று பூகோள ரீதியான பிரச்சினையொன்றாக காணப்படுகின்றது. இவ்வாறு கழிவுப்பொருட்களை சூழலுக்கு சேர்க்கும் இரு பொருளாதார கருமங்களைக் குறிப்பிட்டு, கழிவுகளை குறைக்கக்கூடிய நிலைபேறான தன்மைக்கான எவையேனும் இரு முறைகளைக் குறிப்பிடுக.

2) “கடந்தாண்டு மூன்றாம் தவணை விடுமுறையின் போது கல்லூரி ஒன்றின் வணிகமாணவர் அதிபரின் அனுமதியுடன் மன்றப்பொறுப்பாசிரியரின் வழிகாட்டலுடன் முதியோர் இல்லம் ஒன்றுக்கு சென்று, ஒரு நாள் பகல் பொழுதினை அவர்களுடன் செலவிடுகின்றனர். இதனூடாக அம்மாணவர் சில நல்ல சமூகவிழுமியங்களை பெறக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக பெற்றோரும், பொறுப்பாசிரியரும் தெரிவித்திருந்தனர்.

அ) மாணவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடுமென்கின்ற சிறந்த விழுமியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) சிறந்த ஒழுக்க விழுமியங்களை மாணவர்களுக்கு வழங்கி வருவதனூடாக முதியோர் இல்லத்திற்கு கிடைக்கும் நான்கு அனு கூலங்களைக் குறிப்பிடுக.

3) “நுகர்வோரினால் செலுத்தப்படும் பணத்திற்கு தேவையான அளவிலான திருப்தியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்காக இருக்கின்ற சட்டரீதியான காப்பு நுகர்வோர் பாதுகாப்பு என்பதாகும்”

அ) அண்மைக்காலங்களில் நுகர்வோர் பாதுகாப்பானது கடந்த காலங்களைவிட தேவையொன்றாக இருப்பதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

4) யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாடசாலையொன்றிலிருந்து கற்று வெளியேறிய ஜெனிபன், வினுஷன் ஆகிய இரு நண்பர்களும் இணைந்து கட்டிடப்பொருள் வணிக நிலையம் ஒன்றினை “ஜெனுவின் ஹாட்வெயார் அன்ட்கம்பனி” எனும் பெயரில் கண்டி வீதியில் ஆரம்பிக்கின்றனர்.

அ) மேற்படி வணிகம் எத்தகைய வணிகவகை எனவும், அது பதிவு செய்யப்பட வேண்டிய சட்டத்தினையும் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிகத்தை எதிர்காலத்தில் விஸ்தரிப்பதற்கு பொருத்தமான வணிக வகையினை குறிப்பிடுவதுடன், நீர் அதனை தெரிவு செய்வதற்கான நான்கு காரணங்களையும் குறிப்பிடுக.

5) “உலகம் முழுவதும் பிரபல்யமடைந்துள்ள அங்கீகார வணிகங்கள், இலங்கைச் சந்தையிலும் பிரவேசிக்கும் போக்கு இன்று அதிகரித்து வருவதனை காண முடிகின்றது”

அ) பொதுவாக அங்கீகாரம் பெறுபவருக்கு அங்கீகார வணிகம் தோல்வியடையக் கூடிய போக்குகள் குறைவாகக் காணப்படுவதற்குரிய நான்கு காரணங்களைத் தருக.

ஆ) அங்கீகாரம் பெறுபவரின் சில பாதகமான செயற்பாடுகள் அங்கீகாரம் வழங்குபவரின் நன்மதிப்பினை பாதிப்பதுண்டு. அவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தும் நான்கு காரணங்களைத் தருக.

(5x4=20 புள்ளிகள்)

*03.* *1)* முல்லைத்தீவில் உள்ள பாடசாலையொன்றில் க.பொ.த உயர்தரத்தினை கற்று வெளியேறிய நிதுஷன், யதீசன் ஆகிய இரு நண்பர்களில் நிதுஷன் என்பவர் தனது தந்தைவழி கிடைக்கப்பெற்ற நிலத்தில் பாடசாலைகளுக்கு தேவைப்படுவதான கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பிக்கின்றார். யதீசன் என்பவர் இயற்கையான மூலிகைகளைக் கொண்டு நோய் எதிர்ப்புச் சக்தியினை அதிகரிக்கவும், குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் ஊட்டச்சத்து நிறைந்த பானம் ஒன்றினை "வல்லமை" என்ற பெயரில் சந்தைக்கு வழங்குகின்றார்.

அ) மேற்படி இரு நண்பர்களுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட வணிகங்கள் தொடர்பில் நீர் எத்தகைய வேறுபாட்டினை இனம் காணுகின்றீர் என்பதற்கு நான்கு வேறுபாடுகளை தருக.

ஆ) யதீசன் தனது திறன்களை விருத்தி செய்யக்கூடிய எவையேனும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

*2)* "வணிக வங்கிகள் வழங்கும் பிரதான சேவைகள், வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல் என்பனவாகும்"

அ) வணிக வங்கி வைப்புக்களில் சேமிப்பு வைப்புக்கும், நிலையான வைப்புக்கும் இடையே நீர் காணும் நான்கு வேறுபாடுகளைத் தருக.

ஆ) வணிக வங்கிகளால் வழங்கப்படும் வங்கிக்கடனுக்கும், வங்கி மேலதிக பற்றுக்கும் இடையே நீர் காணும் நான்கு வேறுபாடுகளைத் தருக.

*3)* வணிகர் ஒருவரால் பிறப்பிக்கப்பட்ட காசோலையொன்றின் மாதிரி வடிவம் கீழே தரப்படுகின்றது.

இலங்கை வங்கி
சாவகச்சேரி.

பெறுவோன் கணக்கு மட்டும்
மக்கள் வங்கி, வவுனியா

| 0 | 1 | 0 | 3 | 2 | 0 | 2 | 0 |
|---|---|---|---|---|---|---|---|

Pay உ. சிந்துஜன் ~~அல்லது கொண்டுவருபவரிடம்~~

ரூபா முப்பதினாயிரம் மட்டும் 30,000/= செலுத்தவும்.

J.ஜெஸ்லி டேவிட்

0165170 ; 7010 ; 501 ; 003249927

அ) காசோலையுடன் தொடர்புடைய தரப்பினர்களை காசோலையிலிருந்து குறிப்பிடுக.

ஆ) மேற்படி காசோலை எந்த வங்கியில் பணமாக்கப்பட முடியும்.

இ) மேற்படி காசோலையின் நடைமுறைக் கணக்கிலக்கம் எது?

ஈ) மேற்படி காசோலையினை உ.சிந்துஜன் பிறிதொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியுமா? காரணம் தருக.

உ) இக் காசோலையின் குறுக்குக் கோடிடலின் வகை எத்தகையது?

4) "காப்புறுதியில் பணரீதியாக அளவிடக்கூடிய இழப்பொன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை இடரென கருதுவார்"

அ) வணிகமொன்றுக்கு ஏற்படக்கூடிய நான்கு இடர்களையும் அவற்றுக்கு பெறக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகள் நான்கினையும் குறிப்பிடுக.

ஆ) "வணிக நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி, சமூக நடவடிக்கைகளுக்கும் தொடர்பாடல் முக்கியத்துவமானதாகும்" வணிகமொன்றுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவத்திற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

5) "பொருளாதார சமூக விருத்தியிலும், பூகோளமயமாதலிலும் முக்கிய கருவியொன்றாகப் போக்குவரத்து காணப்படுகின்றது" இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாண விமான நிலையத்தினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கிடைத்துள்ள எவையேனும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)

04. 1) "பொருள் தொகையொன்றைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலிருந்து அவற்றை நுகர்விற்காக விநியோகிக்கும் வரை பாதுகாப்பாக வைத்திருக்கும் செயன்முறை களஞ்சியப்படுத்தல் என்பதாகும்"

அ) களஞ்சியங்களில் இடம்பெறக்கூடுமென்கின்ற பொருள் கையாளுகை தொடர்பான நான்கு செயன்முறைகளினைக் குறிப்பிடுக.

ஆ) உற்பத்தி நிறுவனமொன்று களஞ்சியசாலையொன்றை நிறுவும் போது கவனம் செலுத்தும் நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

2) "நிறுவனமொன்றின் செயற்பாட்டுக் கருமங்கள் சீராகப் பாய்ந்து செல்வதற்கு, திட்டமிடப்பட்ட போக்குவரத்து, வழங்கல் சேவை முறைமையொன்று மிக அத்தியாவசியமானதாகும்.

அ) உள்நோக்கிய அமையவியல் (Inbound Logistics) வெளிநோக்கிய அமையவியல் (Outbound Logistics) என்பவற்றை தனித்தனியே விளக்குக.

ஆ) அமையவியல் கருமங்களை சிறப்பாக முன்னெடுப்பதனால் வணிகமொன்றுக்கு கிடைக்கத்தக்க நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

3) யாழ்ப்பாணத்தில் உள்ள மாம்பழ உற்பத்தி வலயத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் திரு.தர்சிகன் என்ற முதல்வர் இலங்கையின் பல்வேறுபட்ட சந்தைகளுக்கு விற்பனை செய்வதற்கு வேறுபட்ட முகவர்களை அமர்த்தி உள்ளார். இவர்களில் சயந்தன், தனது விருப்பப்படியே முதல்வரது சார்பில் மாம்பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்து வருவதுடன், அதனடிப்படையில், தரகுப்பணத்தினையும் பெற்றுக்கொள்கின்றார். சங்கர் கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் தொடர்புபடுத்தி பரிமாற்றம் இடம்பெற உதவுவதுடன் இரு பிரிவினர்களிடமிருந்தும் தரகு கட்டணத்தைப் பெற்றுக் கொள்வார். சாருஜன் முதல்வர் சார்பாக கடனுக்கு விற்பனை செய்து கடன்பணத்தை அறவிடும் பொறுப்புடன் செயற்படுவார். இவருக்கு மேலதிகமாக தரகுப்பணம் வழங்கப்படுவதுண்டு. வில்டன் முதல்வர் சார்பாக மாம்பழங்களை விற்பனை செய்யும் போது தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளத்தக்க முகவராவார்.

அ) மேற்குறிப்பிட்ட முகவர்களான சயந்தன், சங்கர், சாருஜன், வில்டன் ஆகிய ஒவ்வொருவரும் வழங்கும் சேவைகளைப் பொறுத்து பொருத்தமான முகவரின் வகையினுள் உட்படுத்துக.

ஆ) இலங்கை சந்தைகளில் அண்மைய மாதங்களில் விவசாய உற்பத்திகளுக்கான விலை அதிகரித்துச் செல்வதற்கு ஏதுவான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

4) அ) ஒப்பீட்டுக்கிரய அனுகூலத்தினால் நாடொன்றுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) சுதந்திர வர்த்தகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் எவையேனும் நான்கு தடைகளினைக் குறிப்பிடுக.

5) சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்களுக்கிடையிலான இடைத்தொடர்பினை விளக்குக.

அ) சுமைச்சீட்டும், நட்ட ஈட்டுக்கடிதமும்

ஆ) விலைவிசாரணைக் கடிதமும், விலைக்கூற்றும்

## பகுதி II

05. 1) உமது பாடசாலையில் க.பொ.த உயர்தர வணிக மாணவர்களினைக் கொண்ட கல்விச்சுற்றுலா ஒன்றினை பாடசாலை நிர்வாகமும், வணிகமாணவர் மன்றத்தினரும் இணைந்து ஒழுங்கு படுத்துகின்றனர். நீர் வணிக மாணவர் மன்றத்தின் தலைவர் எனக் கருதிக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

அ) கல்விச்சுற்றுலாவினை வெற்றிகரமாக செயற்படுத்தி முடிப்பதற்கு உம்மால் கையாளப்பட்ட முகாமைத்துவக் கருமங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

ஆ) கல்விச்சுற்றுலா வெற்றி பெறுவதற்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை கல்விச்சுற்றுலாவுடன் தொடர்புபடுத்தி நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

2) உமது பாடசாலையின் வணிகமாணவர் மன்றத்தினரால் இம்மாதம் வர்த்தக கண்காட்சி ஒன்றினை நடாத்த முடிவு எடுக்கப்படுகின்றது. மன்றத் தலைவரினால் ஆற்றப்பட்ட பின்வரும் பணிகளை நீர் கற்ற ஹென்றி மின்றஸ்போர்க் என்பவரது முகாமைத்துவ வகிபாகங்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டுவதுடன், அதன் உபவகிபாகங்களையும் அருகே குறிப்பிடுக.

1. மன்ற நிர்வாகசபைக்கூட்டத்தில் கண்காட்சி தொடர்பிலான தீர்மானங்களை அறிவித்தல்.
2. கண்காட்சி ஏற்பாட்டாளர்களுக்கு உரிய இடங்களை ஒதுக்கிக் கொடுத்தல்.
3. கண்காட்சி நோக்கங்களை எட்டுவதற்காக மன்ற உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி வழிகாட்டுதல்.
4. மின்சாரம் தடைப்படல், நீர்வழங்கல் போன்றவற்றில் ஏற்படும் எதிர்பாராத நிலைமைகளுக்கு முகம்கொடுக்க தயாராதல்.

3) "நிறுவன அங்கத்தவர்களுக்கிடையே நிறுவன வளங்களைப் பகிர்ந்தளித்தல் ஒழுங்கமைத்தல் என எளிமையாக கருத முடியும்"

அ) நிறுவனஅமைப்பொன்றுக்கு ஒழுங்கமைத்தலின் முக்கியத்துவங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) ஒழுங்கமைத்தலின் போது நிறுவனங்களில் தோன்றக்கூடிய எவையேனும் நான்கு பலவீனங்களைக் குறிப்பிடுக.

4) பாரியளவில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் ஆடை உற்பத்தி நிறுவனமொன்றில் வடிவமைப்பு தொடர்பான பகுதிக்கு புதிதாக அமர்த்தப்பட்ட ஸ்ரீபா என்ற பெண் ஊழியர், நிறுவனத்திற்கு வருகை தந்த அன்று அதன் கட்டமைப்பு பற்றி அறிய முற்படுகின்றார்.

அ) நிறுவனக் கட்டமைப்பு என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) நிறுவனக்கட்டமைப்பினை வரைபடம் மூலம் வழங்குவதனால் உழியருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

5) “நிறுவன முகாமையாளர்கள் தமது மொத்த பணிநேரத்தில் 85% ற்கு மேற்பட்ட நேரங்களை தொடர்பாடலுக்காகவே செலவிடுவதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன”

அ) நிறுவன அமைப்புக்களுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவங்கள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) மேல்மட்ட முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமைக்குத் தொடர்பாடப்படும் இரண்டு வகையான தகவல்களையும் கீழ்மட்ட முகாமையிலிருந்து மேல்மட்ட முகாமைக்கு தொடர்பாடப்படும் இரண்டு வகையான தகவல்களையும் குறிப்பிடுக.

(4x5=20 புள்ளிகள்)

06. 1) “க.பொ.த உயர்தரத்தில் பின்னர் செல்வி தூரிகா என்பவர் தன்னிடமுள்ள வரையறுத்த நிதியினைக் கொண்டு உற்பத்தி நிறுவனமொன்றை ஆரம்பிப்பதா அல்லது அதனை விடுத்து சந்தைப்படுத்தல் வணிகமொன்றை ஆரம்பிப்பதா என தீர்மானிக்க வேண்டியவராக உள்ளார்”

அ) செல்வி தூரிகாவுக்கு உற்பத்தி நிறுவனமொன்றை ஆரம்பிக்க ஆலோசனை வழங்கின் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) செல்வி தூரிகாவுக்கு உற்பத்தி நிறுவனத்தினை ஆரம்பிப்பதில் ஆர்வம் குறைவாகவும் சந்தைப்படுத்தல் நிறுவனத்தை ஆரம்பிப்பதில் அதிக ஆர்வமும் இருப்பதாக தெரியவரின் சந்தைப்படுத்தலின் மூலம் தூரிகாவுக்கு கிடைக்கும் நான்கு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

2) உற்பத்தி நிறுவனமொன்றின் உற்பத்தி தொடர்பான சில தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| கட்டளைக்கிரயம் (ஒரு கட்டளைக்கு) | 3 ரூபா |
| அலகுக்கிரயம் | 20 ரூபா |
| பேணும் கிரயம் (ஒரு அலகுக்கு) அலகு கிரயத்தில் | 10% |
| வருடாந்தக் கேள்விக்கேற்ப உற்பத்தி | 10,000 அலகுகள் |
| மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைப் பெறுமதி | 1,000,000 ரூபா |
| மொத்த மாறும் செலவு | 600,000 ரூபா |
| மொத்த நிலையான செலவு | 200,000 ரூபா |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) பொருளாதாரக்கட்டளைக் கணியம்

அ) இலாபம்

இ) அலகுக்கான பங்களிப்பு

ஈ) சமப்பாட்டுப்புள்ளி அலகுகள்

3) “வினைத்திறன் கொண்ட உற்பத்திச் செயன்முறைக்கு சிறந்த தொழிற்சாலைத் தள அமைவுத்திட்டம் முக்கியமான ஒன்றாகும்”.

அ) தொழிற்சாலை தள அமைப்புத்திட்டத்தின் வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) தொழிற்சாலை ஒன்றுக்கு தள அமைப்புத்திட்டத்தின் முக்கியத்துவத்திற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

4) “பாதணிச்சந்தையில் முரண்பட்ட பண்புகளைக் கொண்ட குழுக்கள் காணப்படுவதனால், உற்பத்தியாளர்களும் இவற்றில் ஒத்த பண்புகளைக் கொண்ட குழுக்களாக வகைப்படுத்தி உற்பத்திகளை ஆக்கி வழங்குவது தொடர்பில் கரிசனை செலுத்துகின்றனர்”

அ) பாதணிச்சந்தையினை தூண்டங்களாக்குவதற்கு பயன்படும் காரணிகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

ஆ) பயனுறுதி மிக்க பாதணிச்சந்தை துண்டமொன்று கொண்டிருக்க வேண்டிய நான்கு தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

5) “பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக”

அ) இலக்கு சந்தை (Target market)

ஆ) சந்தையில் நிலைப்படுத்தல் (Market Positioning)

(5x4=20 புள்ளிகள்)

07\. 1) ''கடந்த காலங்களைப் போலன்றி இன்று மனித தேவை, விருப்பங்கள் சிக்கல் நிறைந்தவையாக மாறிக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் வணிகர்களும் இத்தகைய சிக்கல் நிறைந்த தேவை, விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு பல்வேறு உத்திகளைக் கையாண்டு உற்பத்தி உருப்படிகள் பலவற்றை பெறுமதியுடன் வழங்க முன்வருகின்றனர்''

அ) இன்று சந்தைகளுக்கு சமர்ப்பிக்கும் பொருட்கள் சேவைகள் தவிர்ந்த வேறு எவையேனும் நான்கு உருப்படிகளை உதாரணம் ஒன்றுடன் குறிப்பிடுக.

ஆ) நிறுவனங்கள் ஒரு பொருள் அல்லது சேவையில் தங்கியிருக்காது ஒன்றுக்கு மேற்பட்ட உற்பத்திப் பொருட் கலவையினை சந்தைக்கு வழங்க முன்வருகின்றன. இத்தகைய உற்பத்திப் பொருட்கலவையினால் உற்பத்தியாளருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

2) ''சந்தைப்படுத்தல் சலவை மாறிகளில் விலை என்பது தனித்துவமான கலவை மாறி என குறிப்பிடப்படுவதுண்டு''

அ) விலை என்பதனை வரையறுத்து ஏன் சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் விலை தனித்துவமானதென கருதுகின்றீர்?

ஆ) உற்பத்தியாளர் விலை குறித்தலின் ஊடாக அடைய எதிர்பார்க்கும் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

3) ''வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை (செல்வத்தை) உச்சப்படுத்துதலே நிதி முகாமைத்தவத்தின் அடிப்படை நோக்கமாகும்''

அ) வணிக உரிமையாளரின் பெறுமான அதிகரிப்பினை நிதி முகாமை எவ்வாறு ஆற்றுகின்றது என்பதனை கம்பனி வணிகத்தை மையப்படுத்தி விளக்குக.

ஆ) மேற்படி வணிக உரிமையாளர்களின் வணிகத்தோடு இணைந்த பெறுமானத்தை உச்சப்படுத்துதல் தவிர்ந்த வேறு நிதி முகாமையின் நோக்கங்கள் நான்கினைத் தருக.

4) வரையறுக்கப்பட்ட கிறிஸ்ரிகா கம்பனியின் கணக்குகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட 31.02.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான தரவுத்தொகுதியொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | **ரூபா** |
|---|---|
| விற்பனைகள் | 10,000,000 |
| விற்பனைக் கிரயம் | 6,000,000 |
| மொத்த இலாபம் | 4,000,000 |
| செலவுகள் | 1,000,000 |
| காலப்பகுதிக்குரிய தேறிய இலாபம் | 3,000,000 |
| **31.12.2019 இல் கணக்கு மீதிகள்** | |
| காணியும் கட்டிடமும் | 25,000,000 |
| மோட்டார் வாகனம் | 5,000,000 |
| சரக்கிருப்பு | 2,000,000 |
| கடன்பட்டோர் | 1,500,000 |
| வங்கி மீதி | 500,000 |
| கடன் கொடுத்தோர் | 1,000,000 |

அ) மேலே தரப்பட்ட தரவுகளின் உதவியுடன் பின்வரும் வீதங்களை கணிப்பிடுக.

1. மொத்த இலாபம் வீதம்
2. தேறிய இலாப வீதம்
3. நடைமுறை விகிதம்
4. இருப்பு புரள்வு விகிதம்

ஆ) கிறிஸ்ரிகா கம்பனியின் பின்வரும் விடயங்களை விபரிக்குக.
1. திரவத்தன்மை
2. இருப்புபுரள்வு தடவைகள்

5) "இலங்கையின் பொருளாதாரத்திற்கு கொழும்பு பங்குப்பரிமாற்றகம் முக்கியத்துவம் பெறுகின்றது"
அ) கொழும்பு பங்கு பரிமாற்றகம் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) கொழும்பு பங்கு பரிமாற்றகம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் பெறும் காரணங்கள் நான்கினை முன்வைக்குக.

(5x4=20 புள்ளிகள்)

08. 1) பங்கு சந்தையில் முதலிடுவதனால் முதலீட்டாளர்களுக்கு நேர், நேரில் அனுகூலங்கள் பல கிடைக்கப்பெறுவதுண்டு.
அ) கொழும்பு பங்கு பரிமாற்றத்தில் முதலீட்டாளர் முதலீடு செய்யக்கூடிய பிணைப்பத்திர வகைகள் எவையேனும் நான்கினைக் குறிப்பிடுக.
ஆ) பங்கு சந்தையில் முதலிடுவதனால் முதலீட்டாளருக்கு கிடைக்கும் இரு நேர் அனுகூலங்களையும், இரு நேரில் அனுகூலங்களையும் குறிப்பிடுக.

2) "பாடசாலையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு கற்றல், கற்பித்தல் செயல் முறையின் வினைத்திறனையும், வினைதிறனையும் விருத்தி செய்வதற்காக பல்வேறு மனித வளங்களின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு அதிபர்கள் கருமமாற்றுவதுண்டு"
அ) மனிதவள முகாமைத்துவம் என்பதனை வரையறுக்குக.
ஆ) நிறுவன நோக்கங்களை அடைவதில் மனிதவள முகாமைத்துவத்தின் நான்கு முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.

3) உமது வணிகத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக மனிதவளங்களை திரட்டும் பொருட்டு குறித்த பணிகளுக்காக வேலை விபரணம், மற்றும் வேலை குறித்துரைத்தல் என்பவற்றினை தயார் செய்ய முற்படுகின்றீர்.
வேலை விபரணம், வேலை குறித்துரைத்தல் என்பனவற்றில் காட்டப்படக்கூடிய தலா குறித்துரைத்தல் என்பனவற்றில் காட்டப்படக்கூடிய தலா நான்கு தகவல்களை தனித்தனியே குறிப்பிடுக.

4) "நீர் ஏற்கனவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் இலத்திரனியல் உபாரண விற்பனை நிறுவனமொன்றின் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளீர் எனக்கருதிக்கொள்க. அந்நிறுவனத்தில் இதுவரை முறையான மனிதவளதிட்டமிடல் தொடர்பிலான நடவடிக்கைகள் எதுவுமே எடுக்கப்படாதிருப்பதனை அவதானிக்கின்றீர். உடனடியாகவே மனித வளங்களைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட முனைகின்றீர்"
அ) மனிதவள திட்டமிடலில் எதிர்கால மனிதவள தேவையினை எதிர்வு கூறும் போது உம்மால் கருத்தில் கொள்ளப்படும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.
ஆ) மனிதவள திட்டமிடல் முக்கியத்துவம் பெறுவதற்கான நான்கு காரணங்களை முன்வைக்குக.

5) "புதிய ஊழியர்கள் எனும் வகையில் வேலைக்குத் தெரிவு செய்யக்கூடிய அல்லது தெரிவு செய்ய முடியாத வேலை தேடுவோர்களின் தொகுதியொன்று தோற்றம் பெறுவதே ஆட்சேர்ப்பு செயல்முறையின் பெறுபேறாகும்.
அ) ஆட்சேர்ப்பு செயன்முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
ஆ) நீர் மேலே குறிப்பிட்ட செயன்முறைகளை நடைமுறைப்படுத்தும் போது அவை ஒவ்வொன்றுக்காகவும் பயன்படுத்தக்கூடிய ஆட்சேர்ப்பு முறைகள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக.

(5x4=20 புள்ளிகள்)